REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 10உ செவ்வாய் (24—5—55) ★ ★ வெளியூர்: வைகாசி 11உ புதன் (25—5—55) [இதழ் 293

## பாஞ்சாலக் கிளர்ச்சி: 779 பேர் கைது!

சாந்திகார், மே 23—

மொழிவழியாக பாஞ்சாலம் அமைக்கக் கோரி எழுப்பும் உரிமைக் குரலுக்கு பஞ்சாப் சர்க்கார் விதித்துள்ள தடையை மீறி கிளர்ச்சியில் ஈடுபட்டுவரும் அகாலிதளத்தவரில் இதுவரை 779 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்றும், இவர்களில் 72 பேர் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைதாகியுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

# 'நேபாள குடிமகளையே நியமிக்க வேண்டும்'

## பகலில் இந்தி எதிர்ப்பாம்! இரவில் இந்தி பயிற்சியாம்!

### இந்தி எதிர்ப்பாளர் மீது அவதூறு!

### இந்திப் பிரசார சபை பொதுச்செயலாளரின் டம்பப் பேச்சு!

தென்னாட்டில் இந்திக்கு உள்ள எதிர்ப்பு வலுத்து வருகிறது; விரிவாகிறது; அழுத்தம் பெறுகிறது.

கட்டாய இந்தியைக் கட்டாயப்படுத்திப் பள்ளிகளில் புகுத்திய சக்ரவர்த்தி ஆச்சாரியார்கூட, இந்தியை எதிர்க்கத் தொடங்கியுள்ளார். இந்தி, இலக்கிய வளமற்ற மொழி—பள்ளிக்குச் சென்று தன்னை தகுதியுடையதாக ஆக்கிக்கொள்ள வேண்டிய நிலையில உள்ள மொழி—என ஆச்சாரியாரே எடுத்துக்காட்டியுள்ளார்.

பிற மொழியினர் மீது இந்தியைக் கட்டாயமாகத் திணிக்க வேண்டும் எனப பிடிவாதம் பேசும் வட நாட்டவர்களுக்கு, 'இந்தி வெறியர்கள்' என்றும், 'பைத்தியம் பிடித்தவர்கள்' என்றும் அத்தாட்சிப் பத்திரம் தந்துள்ளார் ஆச்சாரியார்.

'இந்து' எதிர்க்கிறது!

'சுதேசமித்திரன்' எதிர்த்து எழுதுவதோடு நின்றுவிடாமல் 'கூடார்த்தப் படங்கள்' போட்டவண்ணம் உள்ளது!

மக்கள் சபையில் தென்னாட்டு உறுப்பினர்கள்—அரசியல் கட்சி மாறுபாடுகளை மறந்து— இந்தியை ஒளிவு மறைவு இன்றி எதிர்க்கிறார்கள்!

சென்னை காங்கிரஸ் அமைச்சர்கள், கட்டாய இந்தியின்பால் தங்களுக்குள்ள எதிர்ப்பை திட்டவட்டமாகக் கூறி வருகிறார்கள்!

திராவிட இயக்கத்தவர்தான் எதிர்க்கின்றனர்—தமிழ் கலாச் சாரவாதிகள்தான் எதிர்க்கின்றனர்—என்ற நிலை மாறி நீண்டநாள் ஆகிவிட்டது!

தென்னாட்டில், எப்பக்கம் திரும்பினாலும், எதிர்ப்பு இந்திக்கு இருந்து வருகிறது—வளர்ந்து வருகிறது—தீவிரமாகிக்கொண்டும் வருகிறது!

நடைமுறை—அனைவரும் கண்டுவரும் காட்சி இது!

ஆனால், தட்சிண பாரத் இந்திப் பிரசார சபை பொதுச்செயலாளர் சத்தியநாராயணருக்கு இந்த உண்மை தெரியவில்லை—இல்லை —'நிலையை அறியாது பேசுகிறார்' எனப் பிறர் நம்பிவிடுவர் என்ற நம்பிக்கையில், "எதிர்ப்பா—இந்திக்கா—யார் சொன்னார்கள்—தென்னாட்டில் இந்திக்கு எதிர்ப்பு கிடையவே கிடையாதே! எதிர்ப்பு இருப்பதாகச் சொல்லுவது வெறும் பொய்! உண்மையில் கூறவேண்டுமானால், கருப்புக் கொடி போன்ற எதிர்க் கிளர்ச்சிகளில் பகலில் கலந்துகொள்ளுகிறவர்களில் சிலர், இரவில், இந்தி வகுப்புகளில் சேர்ந்து இந்தி கற்கின்றனர்' என்று கூறி, உள்ள எதிர்ப்பை மறைக்கப் பார்க்கிறார் அந்த மகானுபாவர்!

"அரசியல் காரணங்களுக்காகவோ, அல்லது தங்களுக்கு அரசாங்கத்தில் வேலை பெறும் வாய்ப்பு கிடைக்காதே என்ற காரணத்திற்காகவோ பயந்து சிலர் இந்திக்கு எதிர்ப்புச் செய்கின்றனர்," என்றும் அந்த அசத்தியநாராயணர்—இல்லை—சத்தியநாராயணர் எதிர்ப்பையும், எதிர்ப்பாளர் நிலையையும் பழித்துப் பேசுகிறார்!

தமிழ்நாட்டில் மட்டும் ஆயிரம் நபர்கள் இந்திப் பிரசாரம் செய்துவருவதாகவும், ஒவ்வொரு ஆண்டும் 25,000 நபர்கள்வரை பலதரப்பட்ட இந்திப் பரீட்சைகளில் கலந்துகொள்ளுகின்றனர் என்றும் அவர் புள்ளிவிவரம் காட்டி, இருக்கும் எதிர்ப்பின் வேகத்தையும், விரிவையும் குறைத்துவிடப் பார்க்கிறார்!

தென்னாடு முழுவதிலும் சேர்ந்து 4,500 நபர்கள் இந்திப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும், ஒவ்வொரு ஆண்டும் 1,00,000-க்குக் குறையாதவர்கள் இந்திப் பரீட்சைகளில் பங்கு கொள்வதாகவும், பிரசாரகர்களுக்குச் செலவாகும் பணத்தை ஆங்காங்கே உள்ளவர்கள் கொடுப்பதாகவும் அவர் எடுத்துக்காட்டி, இந்திக்குத் தென்னாட்டில் பெரும் செல்வாக்கு இருப்பதாக வட நாட்டவர் நம்ப வேண்டுமென விரும்புகிறார்!

"தென்னாட்டில் இந்திக்கு எதிர்ப்பு கிடையாது; அம்மொழிக்கு அமோக வரவேற்பு இருக்கிறது," என வட நாட்டவரை நம்பச் செய்வதில்தான், சத்தியநாராயணரின் சுக வாழ்வு இணைந்திருக்கிறது!

எனவே, அவர் இப்படியெல்லாம் 'தீப்பறவை' வேலை செய்து இந்திக்குத் தென்னாட்டில் உள்ள எதிர்ப்பை, வட நாட்டவர்—இந்தி வெறியர்கள் அறிய முடியாவண்ணம் செய்ய முயற்சிக்கிறார்! அவருடைய வாழ்க்கைப் பிரச்சினையில் நாம் ஏன் குறுக்கிட வேண்டும்?

சத்தியநாராயணரின் டம்பப் பேச்சு, இந்தியைப் பெருக்கவும் உதவாது—எதிர்ப்பின் பரவலைக் குறைக்கவும் உதவாது!

## 'இந்திய ஆசிரியையை வெளியேற்றவும்'

### இந்தியாவிற்கு எதிராக நேபாள மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!

காட்மண்டு, மே 23—

ஆண், பெண் பள்ளிக்கூடங்களைச் சேர்ந்த ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள், நேபாள அரசரின் அரண்மனை வாயில்முன் சூழ்ந்துகொண்டு, பத்ம கன்யா பெண்கள் கல்லூரியின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள இந்தியப் பெண்ணை உடனடியாக வெளியேற்றும்படி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கடந்த இரண்டு வாரங்களாக இக்கிளர்ச்சி இருந்துவருகிறது. அகில நேபாள மாணவர் சம்மேளனமும், கல்லூரி மாணவர் செயற்குழுவும் கிளர்ச்சிக்கும், ஆர்ப்பாட்டத்திற்கும் மூலபலமாக இருந்து வருகின்றன

பத்ம கன்யா பெண் கல்லூரிக்கு, ஒரு நேபாள குடிமகளையே நியமிக்க வேண்டும் என்பது மேற்படி நிறுவனங்களின் கோரிக்கையாகும்.

### 'டாக்கா மஸ்லின்'— கனவு நனவாகுமாம்!

பம்பாய். மே 23—

அகில இந்திய நூற்புப் போட்டியில் 'மெல்லிய ரக நூற்புப் போட்டி' நடைபெற்றது; 100 பேர்களுக்கு மேல் ஆண்களும் பெண்களுமாகக் கலந்துகொண்டனர்.

25 பெண்கள் உட்பட 40 பேர் 80 கௌண்டர்—அதற்கு மேற்பட்ட மெல்லியரக நூல் நூற்புப் போட்டியில் கலந்துகொண்டனர்.

போட்டிகளை நடத்திய அகில இந்திய கதர் கிராமத் தொழில் போர்டு வெளியிட்டுள்ள அறிக்கையில், "புகழ்பெற்ற 'டாக்கா மஸ்லின்' துணியை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற கனவு சீக்கிரம் நனவாகிவிடும்," என்று, நடைபெற்ற போட்டிகள் பலப்படுத்தியுள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது.

## 'இந்தியா என்பது உத்திர பிரதேசமே'

### டி. டி. கிருஷ்ணமாச்சாரியின் ஒப்புதல்

புதுடில்லி, மே 23—

"இந்தியா என்பது 'பாரத்' என்றும், 'பாரத்' என்பது 'உத்திர பிரதேசம்' என்றும் இந்தியாவிற்கு சிலர் விளக்கம் தருகிறார்கள். இப்பொழுது நீங்கள், 'இந்தியா என்பது பாரத் என்றும், பாரத் என்பது மத்திய பிரதேசம்' என்றும் ஆக்க விரும்புகிறீர்கள்; எப்படி இருந்தாலும், அது எனக்கு அருகாமையில் இருப்பதேயாகும்."

—இவ்வாறு இந்தியப் பேரரசின் தொழில் வியாபார மந்திரியாக உள்ள டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் வேடிக்கையாக—ஆனால், உண்மையைக் கூறியுள்ளார்.

ஏற்றுமதி ஆலோசனை குழுவின் கூட்டத்தில், மேற்படி குழுவில் உறுப்பினராக இருக்கும் எஸ். ஆர் ரானே என்பார், மத்திய பிரதேசத்திலும், பம்பாயிலும் பருத்தி சாகுபடிக்கான பருவகாலம் அக்டோபர் மாதத்தில் தொடங்குவதால், பருத்தி ஏற்றுமதி பங்கீட்டு அளவை அக்டோபர்—நவம்பர் மாதங்களில் அறிவிக்க இந்தியப் பேரரசு முன்வர வேண்டும் எனக் கோரினார். அதற்கு பதில் கூறியபொழுதுதான், மற்ற பகுதிகளில் பருவம் மாறுபட்டு இருக்கிறது எனக் குறிப்பிட்டுவிட்டு, வேடிக்கையாக, இந்தியாவிற்கு மேற்குறித்துள்ள அரும் பொருள் விளக்கத்தையும், டி. டி கிருஷ்ணமாச்சாரி அறிவித்தார்.

## ஆலை ஒன்றினால்!

### ஆயிரம் கைத்தறிக் குடும்பங்கள் திண்டாடின

### தேபர் தரும் தகவல்

பம்பாய், மே. 23—

ஆயிரக்கணக்கான கைத்தறிக் குடும்பங்களை பாழாக்கிய ஆலை ஒன்றை காங்கிரஸ் தலைவர் தேபர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இராஜஸ்தானில் சில மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் கைத்தறியால் பிழைத்து வந்தன; அங்கு ஒரு பணக்காரர், நூற்பு ஆலை ஒன்றைத் துவக்கவே, அந்தக் குடும்பங்கள் பிழைக்க வழியின்றி திண்டாடித் தெருவில் நின்றன," என்று தேபர் கூறியதாக அறிவிக்கப்படுகிறது.

## 20,000 துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

### இங்கிலாந்தின் 5 துறைமுகங்களில் வேலை நடைபெறவில்லை

லண்டன், மே 23—

இங்கிலாந்தின் மிக முக்கியமான 5 துறைமுகங்களில் சுமார் இருபதாயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருப்பதால் 50-க்கும் அதிகமான கப்பல்களில் ஏற்றுமதி-இறக்குமதி வேலைகள் தடைபட்டுவிட்டன என்று தெரிகிறது.

லண்டன், லிவர்பூல், மான்செஸ்டர், பிர்கன்ஹெட், ஹல் ஆகிய துறைமுகங்களில் தான் வேலை நிறுத்தம் நடைபெறுகிறது.

புதிதாக ஒன்றாக இணைந்த 'ஸ்டிவடார்கள்—டாக்கர்' யூனியனைச் சேர்ந்தவர்கள் தான் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாயும், தங்கள் சங்கத்திற்கு பிரதிநிதித்துவம் கோரியே அவர்கள் வேலை நிறுத்தம் செய்திருப்பதாயும் தெரியவருகிறது.

அதிக அளவு தொழிலாளரைக் கொண்ட இதன் போட்டிச் சங்கம், வேலை நிறுத்தத்தைக் கண்டித்திருப்பதாயும் தெரியவருகிறது.

## காவியணிந்தோரெல்லாம் துறவிகளா?

### பண்டித நேரு பதில் தருகிறார்

புதுடில்லி, மே 23—

"காவியும் கமண்டலமுமாகக் காட்சி தரும் 80 லட்சம் பேரில் எத்தனை பேர் உண்மையான துறவிகள்?"

"அவர்களில் பெரும்பான்மையோர் உண்மையான துறவிகள் அல்லர்,"

என்று பண்டிதர் பகர்ந்திருக்கிறார்.

"எவ்வித வேலையும் செய்யாமல், உணவும், உறைவிடமும் கிடைக்கின்ற காரணத்தால், அனேகர் இந்த சுலபமான வாழ்க்கையை மேற்கொள்ளுகின்றனர்; இது மிக மோசமானது,"

என்றும், பண்டித நேரு, காங்கிரஸ் பெண் ஊழியர் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 24—5—'55 செவ்வாய்

# பிரசாத்தின் பல்லவி!

இப்பொழுதுள்ள ஆங்கில முறைக் கல்வியைப் பற்றி வன்மையாகக் கண்டித்துப் பேசுவதையே ஒரு பெரிய நாட்டுப் பணியாகக் கருதிக் கொண்டிருக்கின்றனர் பெரும்பாலோர். அத்தகு கண்டனப் பணி மிக மிகத் தீவிரமாகக் கொடுந் தொத்து நோயாக மாறியும் போயிருக்கிறது.

குறிப்பிட்ட ஒரு கல்வி போதனையால் ஏற்படக்கூடிய நலன்களையும் தீமைகளையும் எடுத்துக் காட்டி, அக்கல்வி முறை நீக்கவேண்டும் அல்லது திருத்தி அமைக்கப்பட வேண்டும் எனக் கூறுவோர் தொகையைக் காட்டிலும், பொதுவாகக் கும்பலில் கோவிந்தா போடுவோர் தொகையே பல்கிப் பெருகுகின்றது. குறிப்பிட்ட எந்த ஒரு கல்வி ஏற்பாட்டாலும் விளையாத—விளைய முடியாத தீமைகளைக் கூட, அந்தக் கல்வி ஏற்பாட்டாலேயே விளைந்ததாகப் பழி சுமத்தி, ஆங்கிலக் கல்வி முறையை உடனடியாக அறவே அகற்ற வேண்டுமென வாய் கிழியக் கத்துவோரும் இருக்கிறார்கள். அவர்கள் செயல் எள்ளி நகையாடத் தக்கதேயாகும்.

தாங்களும் கல்விமுறை குறித்துக் கருத்து அறிவிக்க உரிமையுடையவர்கள் — தகுதி பெற்றிருப்பவர்கள் எனத் தங்களுக்குத் தாங்களே மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிற சில திருமேனிகளும், கல்வித் துறை சீர்திருத்தம் குறித்து வாய் திறப்பதற்கே தங்களுக்கு இஞ்சிற்றும் அருகதை கிடையாது என்ற உண்மையைத் தாங்களே விளக்கமாகத் தெரிந்திருந்த போதிலும்கூட, கல்வி முறையில் இருக்கும் கோளாறுகள் இவையிவை என எக்காளமிடுகின்றன. தங்கள் அறிவுக்கும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட ஒரு விஷயத்தில் தாங்கள் அறிவிக்கும் கேலிக் கூற்று கண்டு, தங்களைப் பிறர் எள்ளி நகையாடுவதை அறிந்தும் அறியாதவர்போல் நடித்து, தங்களை நோக்கி வரும் எதிர்ப்பை ஏசுவோரும் மேற்படி திருமேனிகளில் இருக்கத்தான் செய்கின்றன. பெரும்பான்மையான மக்களிடம் இருந்துவரும் அறியாமைதான், கல்வித் துறை குறித்து எவர் வேண்டுமானாலும், எது வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் உளறி வழியலாம் என்ற துணிவை மேற்குறிப்பிட்ட வகையினருக்குக் கொடுத்திருக்கிறது என்பது மிகையாகாது.

ஆங்கிலக் கல்வி முறையினால் வேலையின்மை பெருகி வருவதாகவும், உடலுழைப்பு இழிவானது என்ற கெடுமதி பரவலாக வேரூன்றி இருப்பதாகவும், இப்பொழுதுள்ள முறையில் திருத்தம் வேண்டுவோர் குற்றம் சாட்டிவருகின்றனர். இந்தப் பட்டியலில் இந்தியப் பேரரசின் தலைவர் இராசேந்திரப்பிரசாதும் சேர்ந்திருக்கின்றார்.

வேலையின்மை பெருக்கத்திற்கும், உடலுழைப்பு இழிவானது எனக் கருதப்படுவதற்கும் ஆங்கிலக் கல்வி ஏற்பாடுதான் முழுதும் காரணமா என்பது ஆராயத்தக்கது.

ஆங்கிலக் கல்வி முறையால் விளைந்த கேடுகளென, வேலையின்மை பெருகுவதையும், உடலுழைப்பைக் கேவலமாகக் கருதுவதையும் குறிப்பிட்டதோடு தங்களுடைய குற்றச்சாட்டுப் பட்டியலை நிறுத்திக் கொண்டதற்காக நாம் அவர்களைப் பாராட்ட வேண்டும். குடிமக்கள் பெருக்கத்திற்கும், கொடிய தொத்து நோய்களின் வளர்ச்சிக்கும் கூட, ஆங்கிலக் கல்வி முறைதான் மறுக்க முடியாத அடிப்படைக் காரணமாகும். ஏன்—அந்த நல்லறிவாளர்கள் கூறாது விட்டமைக்காக ஒவ்வொருவரும் உள்ளூர மகிழத்தான் வேண்டும்.

ஆங்கிலக் கல்வி முறையை அடிப்படையாகக் கொண்டுதான், பெரும்பாலும் உலக நாடுகள் அனைத்திலும் கல்வி போதனை ஏற்பாடுகள் செயலாற்றப்பட்டு வருகின்றன. அங்கெல்லாம் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படத்தான் செய்கின்றன. கல்வி போதனைக்கும், வேலையின்மைக்கும் தொடர்பேற்படுத்தி, கல்வி போதனையில் தலைகீழ் மாற்றம் புகுத்த வேண்டும் எனக் கூறுவதற்குப் பதிலாக, பொருளாதார ஏற்பாட்டைத் தேவைப்படும் அளவிற்குத் திருத்தி அமைக்கவும், தொழில் துறைகளை விரிவுபடுத்தவும், அங்கெல்லாம் உள்ள நல்லறிவாளர்கள் அறிவுரை கூறுகிறார்கள். அவ்வழியில் புரட்சிகரமான மாற்றங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனால் இங்குமட்டுந்தான் சமுதாயத்தில் காணப்படும் எந்தக் கோளாறுக்கும், ஆங்கிலக் கல்வி முறைமீது குற்றம் வெகு வேகத்தில் தாக்குதல் நடத்தப்படுகிறது. இருக்கும் கல்வி முறையை மாற்றிவிட்டு, மேலும்கூடுதலான அறியாமையில் ஆழ்த்தக்கூடிய ஆதாரக் கல்வியை ஏற்கவேண்டுமென ஒப்பாரி வைக்கப்படுகிறது. என்னே இருந்தாலும் பாரத் பூமியல்லவா? ஆத்மார்த்தத் துறை அறியாத உலகாயத வாதிகளைப் பின்பற்றி இந்தியத் துணைக் கண்டத்திலும் கல்வியைப் பெருக்குவது, பாரதப் பண்பாட்டிற்கு ஒத்துக் கொள்ளுமா?

ஆங்கிலக் கல்விமுறை ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு கல்வி வளர்க்கும் மற்ற நாடுகளில், உடலுழைப்பு இழிவெனக் கொள்ளும் மனப்போக்கு, படித்துப் பட்டம் பெற்றவர்களிடம் அறவே கிடையாது. அவ்வாறு இருப்பதாக இதுவரை ஒருவர்கூடக் கூறினது கிடையாது.

எனவே, மற்ற நாடுகளில் செய்யாத ஒரு கேட்டை—அதாவது உடலுழைப்பைக் கேவலமானது எனக் கருதும் ஒரு போக்கை, இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டும் ஆங்கிலக் கல்வி முறை ஏற்பாடு செய்திருக்கிறது எனச் சொல்வதும்— கொள்வதும் ஒருக்காலும் பொருந்தாது. ஆங்கிலக் கல்வி முறையால்தான் உடலுழைப்பை வெறுக்கும் ஒரு போக்கு இங்கு இருந்து வருகிறது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டுமானால், அதே கல்வி முறையைப் பின்பற்றி வரும் மற்ற நாடுகளிலும் அதே விளைவு இருக்கிறது என மெய்ப்பித்தாக வேண்டும். ஆனால், அப்படி மெய்ப்பிப்பதற்கு மற்ற நாட்டு நடைமுறை உண்மை இடந் தருவதாக இல்லை.

எனவே, ஒரு கல்விமுறை— அதாவது ஆங்கிலக் கல்விமுறை ஐரோப்பிய நாடுகளில் ஒரு விளைவையும், அதற்கு நேர்மாறான ஒரு விளைவை இந்தியத் துணைக்கண்டத்திலும் உண்டாக்கி இருக்கிறது எனக் கருதுவதும் ஒப்புவதும் நியாய விரோதமாகும். ஆனால், ஒரே கல்வி முறையை ஏற்றுக் கொண்ட மேல்நாடுகளிலும், இந்தியத் துணைக்கண்டத்திலும் படித்துப் பட்டம் பெற்றவர்களிடம் வெவ்வேறு விதமான முரண்பாடு கொண்ட போக்கு இருந்து வருகிறது. இது மறுக்க முடியாத உண்மை.

ஆங்கிலக் கல்வி முறை ஏற்பாட்டில் பயின்று பட்டம் பெற்ற மேல்நாட்டினர் உடலுழைப்பை இழிவாகக் கொள்ளாத நிலை இருக்கும்பொழுது, அதே கல்விப் பயிற்சியின்கீழ் பட்டம் பெற்ற இந்தியத் துணைக் கண்டத்தவரிடம் உடலுழைப்பைக் கேவலமாகக் கருதும் நிலை இருக்கிறது என்றால், அதற்குரிய அடிப்படைக் காரணத்தை ஆங்கிலக் கல்வி முறையால் தேடுவது பயனற்றதாகும். அந்த முரண்பாட்டு விளைவுக்குரிய உண்மைக் காரணத்தை வேறு இடத்தில்தான் தேடியாக வேண்டும். அப்பொழுதுதான், படித்துப் பட்டம் பெற்றுள்ள நம்மவர் மனப்போக்கில் இடம் பெற்றிருக்கும் உடலுழைப்பை வெறுத்தொதுக்கிவிடும் தொத்து நோயைக் களைந்தெறிய நம்மால் இயலும்.

உயிர் வாழ்வதற்கு அடிப்படையாக உள்ள உழவை இழிவுபடுத்துவதும், கைத்தொழில்களை நிந்திப்பதும் சிறப்பாகக் கூறப்பட்டிருப்பதோடு, பல நூறு ஆண்டுகளாக நடைமுறையில் கையாளப்பட்டும் வந்திருக்கிறது ஆரிய தர்மம்.

ஆரிய அறநூலார் கூறும் 'அறுதொழில்' உழவையோ, கைத்தொழிலையோ உள்ளடக்கமாகக் கொண்டிருக்கவில்லை.

தாளாற்றித் தந்தும் பதனைத் தும் தமிழர் — திராவிடர் வாழ்க்கை முறை என்பதை சென்ற கால வரலாறு மெய்ப்பிக்கிறது.

எனவே, ஆங்கிலக் கல்வி முறையை மட்டுமே சீர்திருத்திவிடுவதால், ஆரிய ஆசாரத்தால் — அறநூல் கோட்பாட்டால் ஏற்பட்டக் கேடுகள் களையப்பட்டுவிடப்போவது ஒருநாளும் கிடையாது.

ஆங்கிலக் கல்வி முறை, மேற்கூறிய ஆரியத்தால் விளைந்த கேட்டைக் கட்டுப்படுத்தி இருக்கிறது எனக் கூறலாமேயல்லாது, கூட்டி இருக்கிறது எனக் கொள்வதற்கு நடைமுறையில் ஆதாரம் இல்லை. இந்த உண்மையை இந்தியப் பேரரசின் தலைவர் பிரசாத் அறிய வேண்டும். அப்பொழுதுதான், மற்றவர்கள் போல் அவரும் பல்லவி பாடுவது இல்லாது இருக்கும்.

# பிரிட்டிஷ் டோரிகளுக்கு சொத்து கிடைத்த வகை?

## இந்தியரைக் கொள்ளையிட்டது மூலமே கிடைத்தது என்கிறார் பெவான்!

"இங்கிலாந்தில் உள்ள டோரி குடும்பங்கள் பலவற்றிற்கு கிடைத்த சொத்துக்கள் எல்லாம், இந்தியாவில் கொள்ளையிடப் பட்டவை;

"ஏகாதிபத்தியக் கொள்ளை இப்போது இல்லாமலாகி வருவதினால்தான் டோரிக் கட்சியினர் கோபப்பட்டு வருகின்றனர்."

—என்று ஹெமல் ஹெம்ப்ஸ்டென் எனுமிடத்தில் நடைபெற்ற தேர்தல் பொதுக் கூட்டமொன்றில் பேசிய பிரிட்டிஷ் தொழிற்கட்சி இடதுசாரித் தலைவர் அனூரின் பெவான் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர், காந்தியாரைப் பற்றி சர்ச்சில், 'அரை நிர்வாண பக்கிரி' என்று குறிப்பிட்டதை இடித்துரைத்து காந்தியாரைப் பாராட்டிப் பேசினார் என்று கூறப்படுகிறது.

## தந்தையின் சொத்தை நிராகரிக்கும் மகன்!

### நீதிமன்றத்தின் தீர்ப்பு

நியூயார்க், மே 23—

தம்முடைய தந்தையார் தமக்கென எழுதி வைத்துவிட்டுப் போன 4 லட்சம் டாலர் பெறுமான சொத்தை நிராகரிக்கத் தமக்கு உரிமையுண்டென்று, இங்குள்ள யூஜின் குட்டர் என்பவர் நீதிமன்றம் ஒன்றில் மனுச் செய்திருக்கிறார்.

தம்முடைய தார்மீக, அரசியல் கோட்பாடுகள் காரணமாகவே அதனைத் துறப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

மனுவை விசாரணை செய்த நீதிமன்றமும், 'வேண்டா வெறுப்பு'டன், இந்தப் பிரச்சினையில் அவருடைய இஷ்டம்போல் நடக்க உரிமையுண்டு என்று தீர்ப்புக் கூறியிருக்கிறது.

தீர்ப்புக் கூறிய நீதிபதி 'குட்டரின் செய்கைகள் விவேகமானவைகள்தானா அல்லது முறையானதுதானா என்பதில் எனக்கு அக்கறை எதுவும் கிடையாது' என்றும் குறிப்பிட்டிருக்கிறாராம்!

## 6-காரணங்கள்!

புதுடில்லி, மே 23—

இவ்வாண்டில் நிறுவப்பட்ட சமுதாய ஒழுக்க ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களுள் ஒருவரான திருமதி மைத்ரேயி போஸ் என்பவர், பெண்கள் விபசாரத் தொழிலில் இறங்குவதற்கான ஆறு காரணங்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

வறுமை, வீட்டு வசதிக் குறைவு, சினிமா மோகம், விதவைத் திருமண வசதி இல்லாமை, பொருளாதார சுதந்திரம் இல்லாமை, கண்டிப்பான சமூக விதிகள் ஆகியவைகளே மேற்கண்ட ஆறு காரணங்களாம்.

இந்தக் குழு, நாட்டில் நடக்கும் விபசாரம் பற்றிப் பரிசீலனை நடத்தியிருக்கிறது. தனது அறிக்கையை வருகிற செப்டம்பர் திங்களில் சமர்ப்பிக்கலாமென தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## போலீஸ் — பொதுமக்கள் தொடர்புக்குத் திட்டம்

புதுடில்லி மே 23—

நாடெங்கிலும், போலீஸ் — பொது மக்கள் தொடர்பை மேற்கொண்டு சீரிய வகையில் அபிவிருத்தி செய்வதற்காகப் போலீசாரால் விரிவான இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. போலீஸ் விசாரணையின் தரத்தையும், போலீசாரின் நடத்தையையும் அபிவிருத்தி செய்வதில் அதிக கவனம் செலுத்தப்பட்டுவருகிறது

## பிரச்சினைகள் என்னவோ?

### இரட்டைக் குழந்தைகள் மாநாடு: 11 - நாடுகள் பங்கேற்றன!

ஐரோப்பாவின் இரட்டைக் குழந்தைகள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஹாலந்தில் ஆயர்ஷாட் எனுமிடத்திலுள்ள மார்க்கெட்டில், 11 நாடுகளைச் சேர்ந்த 300 ஜோடி இரட்டைக் குழந்தைகள் கூடியிருக்கின்றனராம்.

அவர்களில் சில இரட்டையர்கள் தோற்றத்தில் ஒரேவிதமாகக் காணப்படுகின்றனராம். மற்றவர்களில் சிலர், 'வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும்' உள்ள வேற்றுமைபோல் ஒருவருக்கொருவர் வேறுபட்டுக் காணப்படுகின்றனராம்.

ஆயர்ஷாட் என்ற அந்தக் கிராமத்தின் மொத்த மக்கள் தொகையே 7,735 ஆக இருந்தாலும், அங்கு மட்டும் 62 ஜோடி இரட்டைக் குழந்தைகள் இருக்கின்றனவாம்!

## உருத் தெரியாமல் உடைபடுகின்றன!

சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் வரையில் சென்னை நகரில் ஓடிக்கொண்டிருந்த டிராம் வண்டிகள், உருத் தெரியாதபடி உடைத்தெறியப்பட்டு விட்டன.

டிராம் கம்பெனிக்குச் சொந்தமான அந்த வண்டிகள் பம்பாய் கம்பெனி ஒன்றிற்கு விற்கப்பட்டன; ஆனால் இதனை ஆட்சேபித்து நீதிமன்றத்தில் மனுச் செய்து கொள்ளப்பட்டது; மனுவை விசாரித்த நீதிமன்றம், 'டிராம் வண்டிகள் விற்பனை செல்லுபடியானதே' என்று தீர்ப்பளித்தது.

இந்த உத்தரவைத் தொடர்ந்து, அந்த வண்டிகளையெல்லாம் உடைத்தெறியும் வேலைகள் அதி தீவிரமாக—'மின்னல் வேகத்தில்' நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் உள்ள 104 வண்டிகளில் பெரும்பாலான எண்ணிக்கை வண்டிகள் உடைத்தெறியப்பட்டு விட்டனவாம்!

## இந்தியாவுக்கு வரும் பாகிஸ்தானியர்

### தொகை அதிகரிக்கிறதாம்!

மே திங்கள் முதல் தேதியுடன் முடிவடைந்த ஒரே வாரத்தில், எட்டாரி மார்க்கமாக 3,826 பாகிஸ்தானிகள் இந்தியாவிற்கு வந்துள்ளதாகவும், 1067 பேர் இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் போயிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வழியாக இதுவரையிலும் வந்துள்ள மொத்தப் பாகிஸ்தானியர்கள் 2,36,316 பேர் என்றும், இங்கிருந்து போன இந்தியர்கள் 71,741 பேர் என்றும் தெரிய வந்துள்ளது.

பாகிஸ்தான் பஞ்சாபில் நடைபெற்ற 'டெஸ்ட் கிரிக்கெட்' போட்டிகளும், இந்திய பஞ்சாபில் நடைபெற்ற 'ஹாக்கி'ப் போட்டிகளுமே இந்த உயர்வுக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

# 'கடல் ஓநாய்' இயங்குமாம்!

இரண்டாவது அணுசக்தி நீர் மூழ்கிக் கப்பல்

அடுத்த ஜூலை மாதத்தில் 'ஸீவுல்ப்' என்ற ('கடல் ஓநாய்') இரண்டாவது அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் இயங்கத் தொடங்குமென அறிவிக்கப்படுகிறது.

3,000 டன் எடையுள்ள கப்பலான 'நாட்டிலசை'ப் போலவே இதுவும் ஓர் நீர்மூழ்கிக் கப்பலாகும்!

# இலங்கை இந்தியர் குடியுரிமை மனுக்கள்

எப்போது பைசலாகும்?

"இலங்கை இந்தியர் செய்து கொண்டுள்ள குடியுரிமை மனுக்கள் வருகிற 1957-ம் ஆண்டின் மத்தியில் பைசல் செய்யப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது," என்று இலங்கை அதிகாரிகள் சிலர் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தியா — இலங்கைக்கு மிடையே ஏற்பட்டிருந்த ஒப்பந்தப்படி, 1954 ஜனவரியிலிருந்து இரண்டு ஆண்டு காலத்திற்குள் இலங்கைக் குடியுரிமை கோரும் மனுக்கள் பைசல் செய்யப்பட்டு விட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்த இலாகாவில் சிப்பந்திகள் பற்றாக்குறையாக இருப்பதால் இதற்குச் சாத்தியமில்லை என்றும் கூறப்படுகிறது.

எனினும், வருகிற ஜூன் திங்கள் முதல் தேதி தொட்டு, மேலும் புதியதாக 13 டெபுடி கமிஷனர்கள் நியமனம் பெறுவர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இது தவிர, மனுக்களைப் பைசல் செய்யும் வேலையைத் துரிதமாக்குவதற்கு மேலும் 3 கிளைக் காரியாலயங்கள் திறக்க ஏற்பாடுகளைத்தும் முடிவடைந்து வருகின்றன என்றும் தெரிகிறது.

இதுவரையிலும், இலங்கைக் குடியுரிமை கோரிச் செய்துகொள்ளப்பட்ட மொத்தம் 2,37,000 மனுக்களில் சுமார் 50,000 மனுக்கள்தான் பைசல் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

## 988 புதுக் கம்பெனிகள் பதிவு செய்யப்பட்டன!

1954 எப்ரலிலிருந்து 1955 ஜனவரி வரையுள்ள பத்து மாத காலத்தில், மொத்தம் 192·12 கோடி ரூபாய் அங்கீகரிக்கப்பட்ட மூலதனமுள்ளவையும் பங்குகள் வரையறுக்கப்பட்டவையாகவுமுள்ள 988 கம்பெனிகள் பதிவு செய்யப்பட்டன.

# வாக்கெடுப்பே சிறந்தது!

கராச்சி, மே 22—

"காஷ்மீர் பிரச்சினைக்கு அந்த பகுதி மக்களிடையே வாக்கெடுப்பு நடத்துவதே சிறந்த பரிகாரமாகும்,"

என்று, டில்லியிலிருந்து திரும்பியுள்ள பாக். பிரதமர் முகம்மது அலி தெரிவித்திருக்கிறாராம்.

தான், இந்தியப் பிரதமருடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் 'மிக உபயோகமானவை' என்றும் அவர் கூறியதாகதெரிகிறது.

## உண்மைதானா?

சீக்கியர்களின் பெரிய மத நிறுவனமான 'சிரோமணி குருத்துவார் பிரபந்த'க் குழுவின் தலைவராக இதுவரையிலும் இருந்துவந்த மாஸ்டர் தாரர்சிங் தமது தலைமைப் பதவியைத் துறந்துவிட்டார் எனத் தெரிகிறது.

அவரை ஒட்டி, மேற்படிக் குழுவின் செயலாளராக இருந்த சர்தார் சிங்கும் இராஜினமா செய்துவிட்டார் எனக் கூறப்படுகிறது.

# இந்தியாவின் விவசாயத்திற்கு அணுசக்தி சாதனங்கள்!

## அமெரிக்க விஞ்ஞானி தரும் தகவல்

"இந்திய விவசாயத் துறையில் முக்கிய முன்னேற்றங்கள் ஏற்பட அணுக்கதிரியக்கமுள்ள ஐசோட்டோப்புகள் மூலம் நடைபெறும் ஆராய்ச்சிகள் வசதியளிக்கின்றன,"

என்று, அமெரிக்க மண் விஞ்ஞானி டாக்டர் ஜேம்ஸ் புளூம் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் நடைபெறும் ஆராய்ச்சியின் பயனை அப்பிராந்தியத்திலுள்ள எல்லா நாடுகளும் அடையும் என்றும், புதுடில்லியிலும், அமெரிக்காவிலும் பயிற்சி பெறும் இந்தியத் தொழில் நிபுணர்கள் சமீபமுள்ள நாடுகளுக்கு தம் பிரத்தியேக அறிவை அளித்து உதவக் கூடுமென்றும் குறிப்பிட்டார்.

இந்தியாவில் இன்னின்ன இடத்தில் இன்னின்ன வளமுள்ள மண் உண்டு எனக் காட்டும் மண் அமைப்புப் படம் வெகு சீக்கிரத்தில் தயாராகுமென்றும், இது இப்பொழுது நடைபெறும் ஆராய்ச்சிகளின் உடனடியான பலனாகுமென்றும் அவர் கூறினார்.

இத்தகைய படம் தயாராகிவிட்டால் குறிப்பிட்ட நிலங்களில் உற்பத்தியை அதிகரிக்க எத்தகைய எரு உபயோகிக்கப்பட வேண்டுமென இந்திய விவசாயிகள் உணர்ந்துகொள்ள முடியுமென்றும் டாக்டர் புளூம் தெரிவித்தார்.

ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மைக்கிராஸ்கோப்பு போலவே கதிரியக்கமுள்ள ஐசோடோப்புகளும் ஒரு ஆராய்ச்சிக் கருவியாகுமென்றும், பரிசீலனைகளை சுலபமாக நடத்துவதற்கு இவை பயன்படுகின்றன என்றும், செய்ய முடியாத சில பரிசீலனைகளைச் செய்து பார்க்க இதனால் முடிகிறது என்றும் டாக்டர் புளூம் எடுத்துக் காட்டினார்.

பஞ்சாபிற்கு ரூ. 1,50,000-மும், ஆந்திராவிற்கு ரூ. 1,00,000-மும், ஜம்மு-காஷ்மீருக்கு ரூ 50,000-மும் கடனாகக் கிடைத்திருக்கிறது

ஆகாரத்திற்குப் பயன்படாத எண்ணெய்களை பயன்படுத்துகின்ற சோப்புத் தயாரிப்புத் தொழிலின் அபிவிருத்திக்காக அகில இந்திய காதி, கிராமத் தொழில்கள் குழுவிற்குக் கடனாக ரூ. 26,05,000-மும், மானியத் தொகையாக ரூ. 12,61,675-ம் வழங்கப்பட்டிருக்கிறதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தரப்படுகின்ற மானியத் தொகையில் ஒரு பகுதி, சிப்பந்திகளுக்கான பயிற்சி அளிக்கப்படுவதற்காகச் செலவிடப்படுமாம்.

கடனாகத் தரப்படும் தொகை இத்தொழிலில் ஈடுபட்டுள்ள பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கும், நிறுவனங்களுக்கும் ஆகும் மூலதனச் செலவிற்காகவும், நடைமுதல் செலவுகளுக்காகவும் வழங்கப்படுமாம்.

## 'ஊர்ப் பொதுப் பரிசு' மகசூல் போட்டித் திட்டம்

மகசூல் போட்டித் திட்டத்தின் கீழ், 'ஊர்ப் பொதுப் பரிசு' வழங்குவதற்கான விதிகளை மத்திய சர்க்கார் உணவு, விவசாய இலாகா தயாரித்துள்ளதாம்.

இத்திட்டப்படி, ஒவ்வொரு மாநிலத்திலும், போட்டியில் அதிக எண்ணிக்கையில் கலந்துகொள்ளும் சிறந்த தாலுகாவிற்கு அப்பரிசு வழங்கப்படுமாம். அத்தாலுகாவை முன்னுக்குக் கொண்டு வருவதற்குக் காரணமாக இருந்ததாகக் கிராம அதிகாரிகளால் கருதப்படும் சிறந்த கிராமத்தின் நலனுக்கு அப்பரிசுத் தொகை பயன்படுத்தப்படுமாம் கிராமத்தில் ஒரு பள்ளிக்கூடம், கிடங்கு, அல்லது ஒரு கால்நடைக் கொட்டகை, அல்லது ஒரு நூல் நிலையம் ஆகியவைகளுக்கு இந்தப் பரிசுத் தொகை பயன்படுத்தப்படுமாம்.

இந்தப் போட்டியில், ஒரு மாநிலத்தின் 5 சதவிகிதக் கிராமங்களாவது கலந்துகொள்ள வேண்டுமாம்; ஆனால், இந்த நிபந்தனை காலப் போக்கில் தளர்த்தப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

# கிராமத் தொழில் அபிவிருத்தி

மத்திய சர்க்கார் நிதி உதவி

சிறு சிறு கைத்தொழில்கள், கிராமத் தொழில்கள் ஆகியவற்றின் அபிவிருத்திக்காக, இந்திய சர்க்கார், மாநில சர்க்கார்களுக்கு மேற்கொண்டு கடனுதவியும், மானிய உதவியும் அளிக்க முன்வந்திருக்கின்றனராம்.

இதன்படி, சென்னை மாநிலத்திற்கு ரூ. 2,50,000-மும், ஐதராபாத்திற்கு ரூ 2,22,850-ம், மேற்கு வங்கத்திற்கு ரூ. 2,00,000-மும்,

# சென்னை மாநிலத்தில் முத்து குளித்தல்!

திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்கள், திரு—கொச்சி மாநிலம் ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 700-க்கு மேற்பட்ட முத்துக் குளிப்போர், தூத்துக்குடி கடற்கரையோரங்களில் 70 படகுகளில் சென்று முத்துக் குளிப்பதாகக் கூறப்படுகிறது. இவர்களில் 4 பேர் அராபியர்களாம்!

சென்ற மார்ச்சு மாதத்தின் மூன்றாம் வாரம் தொடங்கி ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகள் நல்ல பலன்கள் அளித்து வருவதாகக் கூறப்படுகிறது

ஏப்ரல் மாதத்தில் மொத்தம் 9 லட்சம் சிப்பிகள் திரட்டப்பட்டனவாம். இதில் சர்க்கார் பங்கிற்கான வருமானம் ரூ. 42,200 ஆகும். 1000 சிப்பிகள் ரூ. 62 முதல் 115 வரை விற்கப்பட்டனவாம்.

முத்துக் குளிப்பில் கிடைத்த முத்துக்களும் மூழ்கி எடுத்த சிப்பிகளில் 40 சதவிகிதமாக இருந்தனவாம்; இதுவும் திருப்திகரமான பலனே ஆகும். வர்த்தகர்களும் பொது மக்களும் ரூ. 2 முதல் 1800 வரை பல ரகங்களைச் சேர்ந்த பல வகையான பருமன்களுள்ள முத்துக்களை வாங்கியிருக்கின்றனர்.

முந்திரிப் பருப்புத் தொழிற்சாலைகளில் சுமார் 50,000 தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

## திருமணம்

19—5—55 காலை 8 மணியளவில், சென்னை திருவல்லிக்கேணி பெரியசாலை எண். 365, கலியாண மண்டபத்தில், தோழர் ஆர். டி அரசு தலைமையில் தோழர் மா சுந்தரமூர்த்தி — தோழியர் இராஜேஸ்வரி (திரு. மு. காசிலிங்கம் அவர்களது புதல்வியார்) திருமணம் நடைபெற்றது. தோழர் கா. அப்பாதுரை, தோழர் இளம்பரிதி ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 5 நன்கொடை தரப்பட்டது—பெற்றுக் கொண்டோம்—நன்றி —பொறுப்பாளர்.

## அன்பளிப்பு

15—5—55ல், நாகையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தின் போது, நீரவி தி. மு. கழகச் சார்பில், 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி பொறுப்பாளர்.

# செய்திச் சுருள்

தி.மு.க. பொதுச்செயலாளர்

## நெடுஞ்செழியன்

மதுரை நகர் ஒட்டல் தொழிலாளர் வரவேற்பு

மாநில மாநாட்டு நிதிக்கு ரூ. 80—0—3 அளித்தனர்

15—5—55ல், தி. மு கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மதுரை வந்த போது, அன்னாரை வரவேற்று, மதுரை நகர் ஒட்டல் தொழிலாளர் சார்பில் தோழர் ஞா. தியாகஅரசு அவர்களால் வரவேற்பு இதழ் வாசித்தளித்து, கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டது. அது போது மாநில மாநாட்டு நிதிக்காக அவரிடம் ரூ. 80—0—3 கொடுக்கப்பட்டது.

குறிப்பு: மதுரை நகர் ஒட்டல் தொழிலாளர் கழகம் விரைவில் துவக்கப்பட இருக்கிறது. அதில் 123 பேர் அங்கம் வகிப்பார்கள் என தெரிகிறது.

* * *

நன்றி அறிவிப்பு

"மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் கேட்டுக்கொண்டபடி, மாநில மாநாட்டு நிதிக்கு ரூ 80—0—3 தந்து உதவிய ஒட்டல் தொழிலாளர்களுக்கும், நிதி திரட்டும் பணியிலும் பொதுச்செயலாளருக்கு அளித்த வரவேற்பிலும் என்னுடன் ஒத்துழைத்த தோழர்கள் ஆர். குருசாமி, எம். ஜானகிராம், புரட்சிவாணன் ஆகியோருக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்," என்ற ம. ந. ஓ தொ.நிதிக்குழுபொறுப்பாளர் தோழர் தியாகஅரசு அறிவித்துக் கொள்கிறார்.

## திராவிடர் பீடி நிலையத் துவக்க விழா

15—5—55 மாலை 6 மணிக்கு, கோவை வெரைட்டிஹால் ரோடில் 13/67 எண்ணுள்ள இல்லத்தில், 'திராவிட பீடி' நிலையத் துவக்க விழா தோழர் ஆர். கஸ்தூரி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ். ஏ. இராசமாணிக்கம், எம். கனகரத்தினம், அ. ச இளங்கோ, சு. ஆறுமுகம், கோவை அரசு ஆகியோர் பீடித் தொழிலாளர்களின் அவதி பற்றியும், அதை அகற்றும் வழிமுறைகள், பற்பல முதலாளிகளால் பீடித் தொழிலாளிகள் மனிதாபிமானமற்ற முறையில் பழிவாங்கப்படுகிற பரிதாப நிலைபற்றியும், பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெரும்பான்மையான திராவிட சமுதாயம் நலிந்து வருகின்ற நிலையை அகற்றி, 'திராவிடர் பீடி' நிலைமை மற்ற நிறுவனங்களுக்கு ஓர் வழிகாட்டியாக செயல்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர்.

## அண்ணா நாடக மன்றம் துவக்கம்

1—5—55ல், எண்ணூர் தி. மு கழகச் சார்பில், கழகப் பணிமனையில் அண்ணா நாடக மன்றம் துவக்கப்பட்டு, உறுப்பினர்களாகத் தோழர்கள் இ. வி. சேது, மா. சூரியப்பிரகாசம், ரா. முத்துகிருஷ்ணன், ராவணன், பி. வி. சங்கரன், பி. வி. கணேசன், ஜானகிராமன், கோவிந்தராஜி, விஜய. முனுசாமி, ரா. கிருஷ்ணன் ஆகியோர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

## மத்திய நூலகக் குழுக் கூட்டம்

திருச்சி மாவட்ட மத்திய நூலக குழுக் கூட்டம், 20—5—55 மாலை 2 மணிக்கு செயங்கொண்டம் கிளை நூல் நிலையத்தில் திரு சி. நடராசன் தலைமையில் நடைபெற்ற போது, திருச்சி நகரைச் சேர்ந்த நான்கு ஊர்களில் புத்தகம் தரும் நிலையம் (டெலிவரி ஸ்டேஷன்) திறப்பதென்றும், மற்றும் சில அபிவிருத்தித் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## குடந்தை பன்னீர்செல்வம் வாலிபர் சங்கம்

13—5—55 மாலை 6 மணியளவில், தோழர் கே. கே நீலமேகம் தலைமையில் நடைபெற்ற சங்க நிர்வாகிகள் கூட்டத்தில், ஜூன் மாதக் கடைசி வாரத்தில் சங்க ஆண்டு விழா நடத்துவதென்றும், இந்நகர தி. மு. கழக அலுவலகத்தை இச்சங்கக் கட்டிடத்திலேயே வைத்துக்கொள்ள அனுமதியளிப்பதென்றும், தோழர் பி. சாமிநாதன் விலகலை அங்கீகரித்தும், ஆண்டு விழா நிதி வசூலிக்க தோழர்கள் கே. எஸ். ராமன், சி. முத்து, எஸ். பெரியசாமி, எஸ். ராஜலிங்கம் ஆகியோரை நியமித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## திரு. வி. க. படிப்பகம்

திரு. வி. க. படிப்பகத்தின் பொதுக் குழு கூட்டம் 18—5—55 இரவு 10 மணிக்கு திரு. ச. சிதாராமன் தலைமையில் சிதம்பரம், நேத்தாஜி தெருவிலுள்ள படிப்பகத்தில் நடைபெற்றபோது, படிப்பகத் தலைவராக திரு. பா. சுப்பையனும், துணைத் தலைவராக திரு. வே. சுப்பராயலுவும், செயலாளராக திரு. சி. பி. பாண்டியனும், துணைச் செயலாளராக இரா. வெங்கடேசனும், பொருளாளராக ப. செல்வமும், செயற்குழு உறுப்பினர்களாக 15 பேர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர் கூட்டம்

சென்னை — பெரியமேட்டு நெ.12, பேரக்ஸ் கேட் ரோடு சங்க கட்டிடத்தில் 19—5—55 இரவு 8 மணிக்கு, தோழர் என். ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— தலைவர்: எம். பி. வி. ராகவன்; துணைத் தலைவர்: ஆர். ராஜகோபால் எம். சி.; செயலாளர்: சி. எம். ராஜவேல்; துணைச் செயலாளர்: ஏ. வி. முனுசாமி; பொருளாளர்: சி. குப்புசாமி. செயற் குழு உறுப்பினர்கள்: என். ஆறுமுகம், டி. ராஜாபாதர், சீனிவாசன், பி. சுப்பிரமணியம், கே. துரைராஜி, டி. முத்துகிருஷ்ணன், எம். துலுக்காணம்.

## 105 மணி நேரம் சைக்கிள் சவாரி

கோலார் தங்கவயல் மலையாளி திடலில், கள்ளக்குறிச்சி தோழர் எஸ் நடராசன் 105 மணி நேரம் சைக்கிள் சவாரி செய்கையில் 40 மணி நேரம் 'செயின்' இல்லாமல் ஓட்டினார்; சைக்கிளிலிருந்தவாறே பல அற்புத சாதனைகள் புரிந்தார்; அவரைப் பாராட்டி தோழர்கள் கே. எஸ். வாசன் எம். எல். ஏ., சாமிதுரை எம். எல். ஏ., நெடுஞ்சேரலாதன், வி. என். தத்தப்பன், திம்மய்யா எம். சி, பெருமாள் ஆகியோர் பேசினர்; பரிசுகள், மலர்கள் வழங்கப்பட்டது.

## பெயர் சூட்டு விழா

16—5—55 காலை 11 மணிக்கு, சேலம் தி. மு. கழகத் தோழர் எஸ். அர்த்தனாரி அவர்கள் துணைவியார் தோழியர் சாரதாம்பாள் அம்மையாரின் ஆண் குழந்தைக்கு, தோழர் இ ஆர். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற பெயர் சூட்டு விழாவில், குழந்தைக்கு 'தாமரைச் செல்வன்' என்று பெயரிடப்பட்டது. தோழர் அ. சுப்பிரமணியம் பாராட்டுரை வழங்கினார். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1/ நன்கொடை அளிக்கப்பட்டது. வரப்பெற்றோம் —நன்றி—பொறுப்பாளர்.

1954—55-ம் ஆண்டின் கடலை உற்பத்தி, 1953 - 54ம் ஆண்டின் உற்பத்தியைவிட 11 - சதவிகிதம் அதிகம்.

# இலஞ்சக் குற்றம் சாட்டப்பட்ட பஞ்சாப் மந்திரி!

## குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவையாம்

## காங்கிரஸ் பார்லிமெண்டரி 'போர்டின்' முடிவு

புதுடில்லி, மே 23—

பஞ்சாப் போக்குவரத்து இலாகா மந்திரி ஜெகத்நாராயண் மீது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறிய 34 இலஞ்சக் குற்றச்சாட்டுகளும் ஆதாரமற்றவை என்று காங்கிரஸ் மத்திய பார்லிமெண்டரி போர்டு முடிவு செய்துள்ளதாம்.

ஜெகத்நாராயண் விரும்பினுல், அவரை அவதூறு செய்த அரசியல் எதிரிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாமெனவும் பார்லிமெண்டரி போர்டு சிபாரிசி செய்துள்ளதாம்!

ஜெகத்நாராயண் மீது சாட்டப்பட்ட இலஞ்சக் குற்றங்களை கடந்த மூன்று மாதங்களாக விசாரணை நடத்தியதாகவும்; முதன் மந்திரியே விசாரணையைத் துவக்கியதாகவும் கூறப்படுகிறது.

குற்றச்சாட்டு காரணமாக அவரிடமிருந்து பறிக்கப்பட்டிருந்த கல்வி இலாகா, பொறுப்பு மீண்டும் அவரிடமே தரப்படுமாம்

★

### 'அப்பன் குதிருக்குள் இல்லை' என்கிருரா?

"காங்கிரஸ் மேலிடம் இலஞ்சக் குற்றம் சாட்டப்பட்ட பஞ்சாப் மந்திரியான ஜெகத் நாராயண் குற்றவாளிதான் என்று தீர்ப்புத் தந்தால் காங்கிரஸ் இயக்கத்தின் கௌரவம் குலைந்துவிடும் என்று அஞ்சியதாக எவரும் எண்ணத் தேவையில்லை; மேலிடம் குற்றச்சாட்டுகள் பற்றிய தஸ்தாவேஜுக்களை, தீவிரமாக—திறந்த மனதுடன்—விருப்பு வெறுப்பின்றி பரிசீலனை செய்துதான், குற்றமற்றவர் என்ற தீர்ப்பு வழங்கியுள்ளது,"

என்று காங்கிரஸ் பொதுச்செயலாளர், ஸ்ரீமன் நாராயண் குறிப்பிட்டிருக்கிருர்.

### ஒரிசா முதன் மந்திரி

#### காங்கிரஸ் தலைமைப் பொறுப்பிலிருந்து விலக விருப்பம்

ஒரிசா முதன் மந்திரி நபகிருஷ்ண சௌத்திரி என்பார், தான் காங்கிரஸ் கட்சித் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ள விரும்புவதாகத் தெரிவித்திருக்கிருர்.

பூதான இயக்கத்தில் முழுவதுமாக ஈடுபடுவதற்கு வசதியாயிருக்கும் பொருட்டே, தலைமைப் பொறுப்பிலிருந்துவிலகிக்கொள்ள விரும்புவதாக அவர் தனது சக அமைச்சர்களிடம் தெரிவித்திருக்கிருராம்.

கட்சியில் அவர் தொடர்ந்து தலைவராயிருப்பதை அவரது சக அமைச்சர்கள் அனைவரும் ஏகமனதாக விரும்புவதாகவும், அவர் விலகிக்கொள்ள விரும்பியுள்ளது பற்றி யோசிக்க அவகாசம் வேண்டுமென்று கேட்டுள்ளதாயும் தெரியவருகிறது.

### என்ன காரணமோ?

டோக்கியோ, மே. 23—

இந்திய இரயில்வேக்களுக்குத் தண்டவாளங்கள் வாங்குவதற்காக இங்கு வந்திருந்த இந்தியத்தொழில் நுணுக்கக் குழுவின் தலைவர் எஸ். சி. டே, தாம் தங்கியிருந்த அறையொன்றில் தூக்கிட்டுக் கொண்டு தற்கொலை செய்தார் என்று செய்தி ஒன்று அறிவிக்கிறது.

வடக்குஜப்பானிலுள்ளகமாய்ஷி எனும் நகரில் ஒரு ஹோட்டலில் அவர் தங்கியிருந்தாராம்.

அவருக்குத் தற்போது 45 வயதாகிறது என்று கூறப்படுகிறது.

பெங்களூரிலுள்ள இந்திய டெலிபோன் உற்பத்திச் சாலையில் வாரத்துக்கு 1,000 டெலிபோன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

## 'தக்க நடவடிக்கை எடுப்போம்'

### கோவா பற்றி பிரதமர் நேரு

புதடில்லி, மே 23—

கோவாவில் நிலவும் நிலைகள் இந்திய சர்க்காருக்குத் தெரிந்துள்ளவைதான் என்றும், அதுபற்றி சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்றும் பிரதமர் பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிருர்.

பூனுவில் பேசிய ம. சோ. தலைவர் ஜே. பி கிருபளானி, "கோவா விடுதலைப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க தாங்கள் சரியெனக் கருதும் நடவடிக்கையை இந்திய சர்க்கார் விரைவில் மேற்கொள்ள வேண்டும்," என்று வற்புறுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

## அறப் போருக்கு அந்தகர் அன்பளிப்பு!

நாகபுரி, மே 23—

கோவா விடுதலை நிதிக்காக கண் பார்வையிழந்த ஒருவர் ரூ. 5 நன்கொடை அளித்திருக்கிருர்.

நாகபுரியைச் சேர்ந்த 59 வயதுடைய இவர், சேனுபதி பாபட்டுடன் உழைப்பவர் என்று கூறப்படுகிறது.

இவர் ஒவ்வொரு இடமாகச் சென்று கோவா சுதந்திரம் பற்றிய பாடல்கள் பாடி பணம் வசூலிக்கிருர் எனத் தகவல் கிடைத்திருக்கிறது.

## நால்வர் மாநாடு

### 'பிராவ்டா' குற்றச்சாட்டு

"நான்கு வல்லரசுகளின் அதிபர்களின் சந்திப்பில், அமெரிக்க, பிரிட்டன் தலைவர்களுக்கு 'உண்மை'யாக ஆவல் எதுவும் கிடையாது; இராஜதந்திர தில்லுமுல்லுகளுக்கும், தேர்தல் பிரச்சாரத்திற்குமே அவர்கள் இந்த யோசனையை உபயோகிக்கின்றனர்,"

என்று ரஷ்யக் கம்யூனிஸ்டு இதழ் 'பிராவ்டா' கருத்தறிவித்திருக்கிறதாம்.

## ரஷ்யத் தலைவர்கள் யூகோ வருகை

ரஷ்யப் பிரதமர் புல்கானின், கம்யூனிஸ்டுக் கட்சிச் செயலாளர் குருஷ்சேவ் ஆகியோர் அடுத்த வியாழனன்று யுகோஸ்லேவியா தலைநகரான பெல்கிரேடுக்கு வருகை தருவார்கள்; அவர்களுடன் ரஷ்யப் பிரமுகர்கள் பலரும் வருகின்றனர்; யூகோஸ்லேவியாவில் எட்டு நாட்கள் தங்குவர்; பேச்சு வார்த்தைகள் பெல்கிரேடில் நடைபெறும்—என்றெல்லாம் செய்திகள் கூறுகின்றன.

### கைவிடப்பட்டதாம்!

சென்னை, மே. 23—

அந்நிய நிபுணர்களின் உதவியுடன் தனிப்பட்டவர்கள் சென்னை மாநிலத்தில், பெரிய அளவில் 'ஹார்லிக்ஸ்' தொழிற்சாலை ஆரம்பிக்கும் யோசனை கைவிடப்பட்டதாகத் தெரிய வருகிறது.

## கழகக் கூட்டம்

★

துறையூர்
அரண்மனை பிள்ளையார்
கோயில் முன்பு
26—5—55 மாலை 6 மணிக்கு
தலைவர்:
பி. அரங்கசாமி எம்.எல்.ஏ.
பேசுவோர்:
கி. மனோகரன்
அருண்மொழி

### சொற் பயிற்சிக் கூட்டம்

25—5—55 மாலை 6 மணிக்கு, சென்னை 5-வது வட்ட தி மு கழக இல்லில், தோழர் வளவன் தலைமையில் நடைபெறும். 'பொருளாதாரம்' என்னும் பொருள் குறித்து தோழர்கள் பலர் பேசுவர்.

### திருவள்ளுவர் நூல் நிலையப் திறப்பு விழா

26—5—55 மாலை 4 மணிக்கு, பாதாங்கி (பெரம்பலூர் வட்டம்) தாலமுத்து—நடராசன் சதுக்கத்தில், திரு என். சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும். பிரமுகர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

### நகர இளைஞர் கழகம்

25—5—55 மாலை 6½ மணிக்கு, சென்னை, சூளை, எண். 10, மாணிக்கச் செட்டித் தெருவிலுள்ள மேற்படி கழக மனையில், '1933—43' என்னும் தலைப்பில் தோழர் எம். என். அரங்கநாதன் சொற்பொழிவாற்றுவார்.

### திருமணங்கள்

26—5—55-ல், சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டத்தைச் சேர்ந்த கலங்காணியில், தோழர் டி. குப்புசாமி—தோழியர் அம்மாக்கண்ணு திருமணம், தோழர் க. அன்பழகன் தலைமையில் நடைபெறும். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்ருேம் — நன்றி — பொறுப்பாளர்.

* * *

26—5—55 காலை 10 மணிக்கு, முசிரி தாலுகாவைச் சேர்ந்த உமையாள்புரத்தில், தோழர் அ. பொன்னம்பலனுர் தலைமையில், தோழர் உ. வே. செல்வராஜ்—தோழியர் சி சரோஜா திருமணம் (மணமகன் இல்லத்தில்) நடைபெறும். தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர். மாலை 5 மணிக்கு, திருச்சி-குமாரி டி. கே. வல்லபாய் குழுவினர் இசை நிகழ்ச்சி நடைபெறும்.

* * *

26—5—55 வியாழன் காலை 9 மணிக்கு மேல், மீர்சாகிப் பேட்டை, வெங்கிடாசல முதலித் தெரு, 36-ம் எண்ணுள்ள இல்லத்தில் தோழர் வே. கன்னியப்பனுக்கும், தோழியர் மேனகாவுக்கும், திரு நாரண துரைக்கண்ணன் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, முகவை ஆர். எஸ். பாண்டியன் சொற்பொழிவாற்றுவர்.

* * *

26—5—55 காலை 9 மணிக்கு, துறையூர், வடக்குத் தெரு, மணமகன் இல்லத்தில், தோழர் அ. சக்தி—தோழியர் மீனும்பாள் திருமணம், திரு. பி. அரங்கசாமி எம் எல் ஏ., தலைமையில் நடைபெறும். தோழர்கள் டி. சே. சீனிவாசன், கி. மனோகரன், பழசுமுத்து, தோழியர் அருண்மொழி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

## தபால்காரருக்கு 428 முத்தங்கள் 'வெகுமதி'

லாம்பீச் (கலிபோர்னியா), மே 23

அமெரிக்க தபால்காரர் ஒருவரை, அவரது 46-வது பிறந்த நாள் விழாவின்போது 428 பெண்கள் முத்தமிட்டு வாழ்த்தினராம்.

அதுமட்டுமோ? அவரது தபால் பையை இழுத்துச் செல்ல வண்டி

# 'விசாகை கப்பல்தொழிலில் வட நாட்டார் ஆதிக்கம்'

### ஆந்திரத் திறமை ஒதுக்கப்படுவதாகக் குற்றச்சாட்டு

"கப்பல் கட்டும் தொழில் நிலையத்தில் பணி புரிவதற்குத் தேவைப்படும் உயர்தர அதிகாரிகள் பிற மாநிலங்களிலிருந்தே பொறுக்கப்பட்டு நியமிக்கப்படுகிருர்கள்; அவ்வாறு நியமிக்கப்படும் உயர்தர உத்தியோகங்களுக்கு தொழில் நிலையத்தில் ஏற்கனவே பணி புரிந்து வருகிறவர்கள் எத்தகைய ஆற்றல் பெற்றவர்களாக இருந்தபோதிலும், அவர்களுடைய விண்ணப்பங்கள் ஒதுக்கித் தள்ளப்பட்டு வருகின்றன."

"தொழில் நிலையக் குடியிருப்பில் 1,000 குடும்பங்களுக்கு மேல் குடியிருந்து வருகின்றனர். இருந்தாலும், அக்குடும்பத்தைச் சேர்ந்த பெண்களின் பிரசவ, மருத்துவ வசதிகளைக் கவனிக்க ஒரு பட்டம் பெற்ற பெண் மருத்துவர் இதுவரை அமர்த்தப்படவே இல்லை; இக்குறைகள் ஆராயப்படவேண்டும்,"

என, விசாகை கப்பல் கட்டும் தொழில் நிலைய ஊழியர் சங்கத் தலைவர் எஸ். சத்தியநாராயண என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

விசாகை இந்துஸ்தான் கப்பல் கட்டும் தொழில் நிலைய ஊழியர் சங்கத்தில் சிறப்புரையாற்றவந்த ஆந்திர அரசாங்க தொழில் மந்திரி காளா வெங்கட ராவ் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:—

"கப்பல் கட்டும் தொழிலைத் தவிர வேறு பெருந் தொழில் எதுவும் ஆந்திராவில் துவங்கப்படவில்லை; இர. ஜமகேந்திரபுரியில் இருக்கும் காகிதத் தொழிற்சாலையோ நஷ்டத்தில் இயங்கி வருகிறது: தொழிலில் முதலீடு செய்ய ஆந்திரர்கள் பின்னடைகின்றனர்.

"ஆந்திரத்தில் தொழில்களைத் தோற்றுவிக்குமாறு தொழில் அதிபர்களையும், மத்திய அரசாங்கத்தையும் கேட்க வேண்டியதாகிறது. ஆற்று முகப்புப் பகுதிகளில் சதுர மைல் ஒன்றுக்கு 1,500 மக்களுக்கு மேல் ஆந்திரத்தில் வசித்து வருகின்றனர். அவர்களை வேறு பகுதிகளுக்குக் குடியேற்ற, ஆந்திரத்தைத் தொழில்மயமாக்க வேண்டும் என மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிருேம்."

அனுபவ பாத்தியதை இருப்பதாகவும், அதனையே பெரும்பாலும் 'பட்டா' பாத்தியதையாகக் கருதலாம் என்றும் நமது 'போலி நண்பர்கள்' சிலர் சட்டம் பேசுகிருர்கள்; ஆனல், அனுபவ பாத்தியதையை ரத்து செய்யவும் சட்டம் இருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியாது போலும்!"

## 'குவியும்' தொகை குறையக் காணேம்!

கல்கத்தா, மே 23—

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்தும், இதுவரையிலும் யாரும் வந்திராத மற்ற மாவட்டங்களிலிருந்தும் சென்ற மாதத்தில் மொத்தம் 67 இந்துக்கள் குடும்பங்கள் வந்தன. இந்த மாதத்தில் இத்தொகை 90 ஆக உயர்ந்திருக்கிறது.

சென்ற ஆறுமாத காலமாக தொடர்ந்து கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து அகதிகள் வந்துகொண்டிருப்பதால் அகதி முகாம்களில் 1½ லட்சம் பேராகக் கூட்டம் அதிகரித்துள்ளதாம்.

## இந்தியாவுக்கு விட்டுக் கொடுப்பதாக!

### பாக். பிரதமர் மீது 'டான்' பத்திரிகை புகார்

"பிரதமர் முகமதலி என்னென்ன தான் சொல்லி மழுப்பின போதிலும், முகமதலி—நேருவின் டில்லி பேச்சுவார்த்தைகள் முறிந்துவிட்டன என்றேதான் கருதவேண்டும்;

'பதில் சலுகை எதையும் பெறுமல் இந்திய சர்க்காருக்கு முகமதலி சர்க்கார் 'விட்டுக் கொடுத்'துத்தான் வருகிறது; இதைவிட, தற்போது நிலவிவரும் 'முட்டுக்கட்டை'யான நிலைமையே நல்லதாகும்"

இவ்வாறு, கராச்சியிலிருந்து வெளிவரும் 'டான்' இதழ், காஷ்மீர் பற்றி நேரு பண்டிதருடன் முகமதலி பேசிய 'விதத்'தைக் கண்டித்துத் தலையங்கம் ஒன்று எழுதியிருக்கிறது.

அப்பத்திரிகை மேலும் கூறுகிறது:—

"பாரதத்திற்கு (இந்தியாவிற்கு)

ஒன்றும், 115 டாலர் ரொக்கமும், அவருக்கு விருந்து வைத்து பரிசாகத் தரப்பட்டிருக்கின்றன என்றும் தெரியவருகிறது.

### அரசியல் நிர்ணய சபை

## அமைக்க முடிவு!

பாகிஸ்தான் சர்க்கார் அவசரமாகக் கூடி, வருகிற ஜூலைத் திங்கள் மத்தியின்போது, புதிய அரசியல் நிர்ணய சபையை அமைக்க முடிவு செய்துள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது பாகிஸ்தானில் உள்ள 4 மாநிலங்களைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் புதிய அரசியல் நிர்ணய சபைக்கு 80 உறுப்பினர்கள் நியமனம் பெறுவராம்.

அதே நேரத்தில், மேற்கு, கிழக்குப் பாகிஸ்தானுக்கும் சரிசமப் பிரதிநிதித்துவம் கிடைக்கும் என்றும் கூறப்பட்டிருக்கிறது

## வழக்கு மன்றம் ஏருத கிராம மக்கள்!

அவுரங்காபாத்தில் உள்ள பிரிம்ப்ரி என்ற ஒரு கிராமத்தில் வாழும் சுமார் ஆயிரம் பேரில் ஒருவர்கூட வழக்காடுபவர்களாக இல்லையாம்!

கடந்த நான்காண்டு காலத்தில், இந்தக் கிராமத்திலிருந்து எந்த ஒரு வழக்கும் நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படவில்லை என்ற பெருமையைப் பெற்று விளங்குகிறதாம்.

கிராமத்தில் ஒரு பஞ்சாயத்தும், மக்களுக்கு நியாய விலையில் பொருள்கள் வழங்குவதற்கு ஒரு கூட்டுறவு சங்கமும் இருக்கின்றன.

## வாழ்க வள்ளல்கள்!

ஜோத்பூர், மே 23—

சமுதாய நலத் திட்டப் பிரதேசம் ஒன்றில், தண்ணீர் விநியோக வசதிக்கு மந்திரி நன்கொடை கோரியிருக்கிருர்.

இதில் போட்டி ஏற்பட்டதாம்! இதனல் மந்திரி, நன்கொடை வழங்குவதை ஏலத்திற்கு விட்டாராம்!

பத்தாயிரம் ரூபாயில் ஏலம் துவங்கப்பட்டது; ஒருவர் ரூ. 31 ஆயிரத்திற்கு அந்த உரிமையை ஏலத்திற்கு எடுத்திருக்கிருராம்—அதாவது, ரூ. 31 ஆயிரம் செலவில், அவர், திட்டத்தைத் தன் சொந்தப் பணத்தில் நிறைவேற்றித் தருவாராம்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.